யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

# வலம்புரி
# VALAMPURI

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1504)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு, 2032 மாசி 06 ஞாயிற்றுக்கிழமை (18-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 61

## களுத்துறை தமிழ் அரசியல் கைதிகள் மகஜர்

# தமிழர் உரிமைக்காகப் போராடும் புலிகளைத் தடைசெய்யக் கூடாது

## ரொனிபிளேயருக்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு விசேட நிருபர்)

**தமிழர் உரிமைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசு தடை செய்யக்கூடாதென கோரும் மகஜர் ஒன்றை களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்அரசியல் கைதிகள் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.**

**இந்த மகஜரில் களுத்துறையில் உள்ள சுமார் 500 தமிழ் அரசியல் கைதிகள் ஒப்பமிட்டுள்ளனர்.**

களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 500 பேர் ஒப்பமிடப்பட்ட மகஜர் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் மூலமாக பிரதமர் ரொனி பிளேயருக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகளினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கை அரசு தமிழ் பேசும் மக்களை நசுக்கவும், கொடுமைப்படுத்தவும், இராணுவ மேலாதிக்கத்தை நிலை நாட்டவுமே அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் ஆகியவற்றை அமுல் படுத்தியுள்ளது. இராணுவத் தீர்வு ஒன்றின் மூலம் இனப் பிரச்சினைக்கான தீர்வினைக் காண்பதிலேயே, அரசு கங்கணம் கட்டி நிற்கிறது;

தமிழ் பேசும் மக்களின்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சர்வ மதக் குழுவினர் நாளை வன்னி பயணம்

சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதில் உள்ள தடைகளைஅகற்றி அரசும், விடுதலைப்புலிகளும்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கச் செய்யும் நோக்குடன் 30 மதப் பெரியார்கள்அடங்கியசர்வமதக் குழுவினர் நாளை வன்னிசெல்லவுள்ளனர்.

வன்னிசெல்லும் இவர்கள்தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு ப தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ளனர் எனதெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இச்சர்வமதக்குழுவினர் வன்னியில்சர்வ மதப் பிரார்த்தனைகளிலும் ஈடுபடுவார்கள் என மன்னார் மறைமாவட்ட ஆயர்அதிவண .இராயப்புஜோசப் தெரிவித்துள்ளார். (வ)

## நோர்வேயின் முயற்சி வெற்றியளிக்கும்
### ஒசிற்ராரோ நம்பிக்கை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் நடைபெற்று வரும் யுத்தத்திற்கு அரசியல் ரீதியாக தீர்வு காணப்படவேண்டிய காலம் வந்துவிட்டது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தநோர்வே அரசு முன்னெடுத்துச் செல்லும் சகல நடவடிக்கைகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத் தூதுவா ஈர்க்கா ஒசிற்ராரோ தெரிவித்துள்ளார்.

சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் இலங்கைக் கிளை

→8ஆம் பக்கம் பார்க்க

★ **புலிகளைத்தடை செய்யும்**

## சிஹல உறுமய போராட்டத்திற்கு மகாநாயக்க தேரர்களும் ஆதரவு!

(கொழும்பு)

பிரிட்டிஸ் அரசு தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டுமெனக் கோரி பத்துலட்சம் பேரின் கையெழுத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிஹல உறுமய அமைப்பினருக்கு ஆதரவாக மல்வத்தபீட மகாநாயக்கர் றம்புக்கல விபக்ஸி தேரர்அஸ்கிரிய மகாநாயக்கர் புத்தரத்தஉருத்திர தேரர் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

இக் கையெழுத்து வேட்டையில் நேற்றுவரை 5 லட்சம் பேரின் கையெழுத்து சேகரித்திருப்பதாகவும் இம் மகஜர் நாளை திங்கட்கிழமை கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவரிடம்சமர்ப்பிக்கப்பட விருப்பதாகவும் சிஹல உறுமய அமைப்பின் தலைவர் திலக் கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

இதேவேளை மல்வத்த அஸ்

→ 8ஆம் பக்கம் பார்க்க

**வடமராட்சியில்**

## ஈ. பி. டி. பி. முகாம் தாக்கப்பட்டது

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி மந்திகைப் பகுதியிலுள்ள ஈ. பி. டி. பி. அலுவலகம் நேற்று முன்தினமிரவு 11. 40 மணியளவில் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவம் நள்ளிரவு 12. 00 மணிவரை நீடித்ததாகவும் அதனையடுத்து தாமும் திருப்பித் தாக்கியதாகவும், இத்தாக்குதலை விடுதலைப் புலிகளே மேற்கொண்டிருக்க வேண்டுமெனவும் வடமராட்சி ஈ. பி. டி. பி அமைப்பாளர் ஐ: ரங்கேஸ்வரன் தெரிவித்

→8ஆம் பக்கம் பார்க்க

## சமாதானத்தை நிலை நாட்ட கோரி வவு-மன்னாரில் மாபெரும் பேரணி

(வவுனியா விசேட நிருபர்)

நாட்டில் சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தி வவுனியா, மன்னார் பிரதேசங்களில் நேற்று மாபெரும் அமைதிப் பேரணி நடைபெற்றது. சர்வமதஅமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த அமைதிப் பேரணி வவுனியா றம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் இருந்து காலை 9. 45 க்கு ஆரம்பித்து 11 மணியளவில் வவுனியா செயலகத்தில் முடிவடைந்தது. இப் பேரணி ஆரம்பிப்பதற்கு (8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைது

(வடமராட்சி கிழக்கு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை தடைசெய்ய வேண்டாமென பிரித்தானிய அரசுக்கு கோரிக்கைவிடும் மகஜரில், கையொப்பம் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்;

வடமராட்சியில் வதிரி, நவின்டில் ஆகிய பகுதிகளில் கையொப்ப வேட்டையில் நேற்றைய தினம் ஈடுபட்ட யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த

→8ஆம் பக்கம் பார்க்க

★ **கைகள் கட்டப்பட்டு, வெட்டுக்காயங்களுடன் கோண்டாவில்**

## பற்றைக்குள் கிடந்த சடலம நேற்று இனங்காணப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் பற்றைக்குள்ளிருந்து கண்டெடுக்கப்பட்ட சடலம் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த குற்றாலம் முரளீதரன் (வயது 22) என்பவருடையதென அடையாளம் காணப்பட்டுள்ளது;

நகைத் தொழிலாளியான பிரஸ்தாப இளைஞன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலைவேளையில் ஓடருக்குச் செய்த நகைகளைப் பருத்தித்துறையில் கொடுத்து விட்டு வருவதாகப் புறப்பட்டதாகவும், அன்றைய தினம் வீடு திரும்பாததால் பருத்தித்துறையிலே அவர் தங்கிவிட்டதாகவும் முரளிதரனின் தாயார் தெரிவித்தார்.

''கைகள் கட்டப்பட்ட நிலையில் சடலம்'' என்ற பத்திரிகைச் செய்தியைப் பார்த்து விட்டு உறவினர் ஒருவரை யாழ். போதனா

→ 8ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

### ஸ்ரீராகவேந்திர ஜோதிடம்

இந்து 28 வயது அழகிய B. A பட்டதாரி மகளுக்கு உள்நாட்டில் தொழில் புரியும் நற்குணம் உடைய மணமகனை எதிர் பார்க்கின்றோம், மகளின் பட்ட படிப்புக்குச் சமானமானதாக இருப்பின் ஜாதகக்குறிப்புடன் தொடர்பு ஸ்ரீராகவேந்திர ஆலயம், நல்லூர். (கி-1486


## திறப்புவிழா

(ஊர்காவற்றுறை)

யா. வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த புதனன்று கணித விஞ்ஞான ஆய்வுகூடம் திறப்பு விழா நிகழ்வு பாடசாலை அதிபர் கி. கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட கணித விஞ்ஞான ஆய்வுகூடத்தின் திறப்பு விழா வைபவத்திற்கு தீவகக்கல்விப் வலயக்கல்விபணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு ஆய்வு கூடத்தினை நாடாவெட்டித் திறந்து வைத்தார். (உ-75)

## நினைவு பிரார்த்தனை

அமரத்துவம் அடைந்த யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை விரிவுரையாளரான பொன்னையா கமலரூபனின் நினைவும் பிரார்த்தனையும் நினைவுச் சொற்பொழிவும் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை மொடோன் கல்வி நிலையத்தில் கி. தவநேசன் தலைமையில் நடைபெற்றது. [உ-42]


# இந்து மாமன்றம்

வட மாநிலம்

# இசை அரங்கு

ராகம் ஒன்று ரசனை மூன்று

இடம்:-

**குமாரசாமி மண்டபம்**
**யாழ். இந்துக்கல்லூரி**

நேரம்:- 18.02.2001 ஞாயிறு மாலை 4 மணி
தலைவர்:- உயர்திரு அ. சிறிக்குமரன்
(அதிபர் யா/ இந்துக்கல்லூரி.)

இசையரங்கில்பங்குகொள்ளும் கலைஞர்கள்

★ சங்கீதபூசணம் எஸ். குமாரசாமி
விரிவுரையாளர் கோ. ஆசிரிய ப்பயிற்சிக் கல்லூரி SLEAS
★ வித்துவான், ஆசிரியர் கி. பத்மநாதன்
★ கலைஞர் கு. நக்கீரன்
★ வித்துவான் இ முருகானந்தன்
★ கலைஞர் நி மதிரூபன் ஆசிரியர்
★ கலைஞர் வி. பிரபா
★ கலைஞர் க. நந்தகுமார்
★ கலைஞர் நா. சதீஸ்குமார்

★ வயிறுநிறையச் சாப்பிட்டேன் ஆனால் உணவு எரிந்துவிட்டது.
★ வீட்டுக்குப் போனேன் வீட்டில் பிள்ளைகள் இல்லை எல்லாம் வெளிநாட்டில்.
★ அயலவர் ஒருவரும் இல்லை கொழும்பில் அவர்கள் போய்க் கொண்டாட்டம்.
★ நான் என்ன செய்வேன்.

ஒருசில மணிநேரம் அமைதியாக
பொழுதைப் போக்குவோம்
வாருங்கள் இசை அரங்குக்கு

**பிரவேசம்: ரூபா30/-மட்டும்**

(இந்நிதி வறிய மாணவரின் அடிப்படைத் தேவைகளுக்காக செலவிடப்படும்) (கி/1499


## பாராட்டி வாழ்த்துகிறோம்

வட்டுக்கோட்டை மூளாய் வீதியைச் சேர்ந்த
"நற்பணியாளர்"
உயர்திரு

### சிவகுருநாதர் இராமச்சந்திரா J.P.

அவர்கள் யாழ் மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டதையிட்டு இன்று இவ்வூர் மக்களாலும் பொது அமைப்புக்களாலும் நடத்தப்படும் பாராட்டு விழா சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல சடுக்கியவளை மகாகணபதிப்பிள்ளையாரும் வட்டுக்கோட்டை கண்ணகிஅம்மனும், வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தனும் துணை நிற்க பிரார்த்திக்கின்றோம்.

வட்டுக்கோட்டை பிரதேச வர்த்தகர்களும்
சித்தன்கேணி பிரதேச வர்த்தகர்களும்
(கி/2531)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

எம் மண்ணின் மைந்தனும், எமது நிலையத்தின் கல்விச் சேவைப் பிரிவினரால் மாதந்தோறும் நிகழ்த்தப்பட்ட மாணவர் கல்வி மேம்பாட்டுக் கருத்தரங்குகளில் கருத்துரை வழங்கியதோடுமட்டுமல்ல பலதுறை சார்ந்த நிபுணர்களையும், அறிஞர்களையும், கல்விமான்களையும் எமது நிலையத்திற்கு அழைத்துவந்து மேற்படி கருத்தரங்குகளில் உரையாற்றவைத்துச் சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்கு உழைத்தவரும், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியுமான,

### திருநாவுக்கரசு கமலநாதன்

அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில்
'கலாநிதி'ப் பட்டம் பெற்றதையிட்டு
மகிழ்வொடு அவரைவாழ்த்துவதில்
பெருமையடைகிறோம்

நாயன்மார்கட்டு சனசமூகநிலையத்தினர்
(கி-1490)

ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்



# ஷஷ்டியப்த பூர்த்தி வைபவ
# சிறப்பு மலர் 18-02-2001

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் மாசி மாதம் 6ம் நாள் (18-02-2001) ஞாயிற்றுக கிழமை மூலநக்ஷத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுப தினத்தில் காலை 9 மணி முதல்...

யா/புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்காதேவி ஆலய (குளத்தடி நாச்சியார் கோவில், தர்மகர்த்தாவும் பிரதமகுருவும்
யா/கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய சிரேஷ்ட குருவும்
புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஐயனார் தேவஸ்தானம் ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தினதும்
யா/கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய பிரதம குருவுமாகிய

"வேதாகம கிரிஜா ஜோதி"
"ஆகம கிரியா திலகம்"

### சிவஸ்ரீ. ந. சபாரத்தினக்குருக்கள் அமிர்தாம்பிகை அம்மா

தம்பதிகளின்

ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் கொக்குவில் கற்புலத்து மனோண்மணி அம்பாள் ஆலய புதிய திருக் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவுக்கு வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்

கோண்டாவில்
15-1-2001

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## சிவஸ்ரீ. கி. சோமசுந்தரக்குருக்களின் ஆசிச் செய்தி

இந்து மதத்திலே இறைவனுக்கு பூஜை செய்யும் சிவாசாரியார்கள் இறைவனுக்கு அடுத்ததாகப் போற்றப்படுகிறார்கள். காரணம் அவர்களின் குருவுக்குரிய அழகிய தோற்றப் பொலிவு பக்தியோடு கூடிய பூஜை, இன்முகத்தோடு கூடிய பேச்சு, இறைவனுக்கும பக்தனுக்கும்மிடையேயுள்ள வழிபாட்டுக்குரிய தொடர்பு இவைகள் எல்லாம் சேர்ந்த ஓர் சிவாச்சாரியாரைக் கண்டவுடனேயே கையெடுத்துக் கும்பிட வேண்டும் போலிருக்கும். இது இந்து மதத்திற்குரிய சிறப்புடைய தன்மை. இவ்வகைச் சிறப்பு மிக்க சிவாசாரியர்களிலொருவர் தான் இன்று ஷஷ்டியப்த பூர்த்தி விழாக்காணும் சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் அவர்கள். இவர் எத்தனையோ ஆலயங்களில் நித்திய, நைமித்திய பூசை விழாக்களை நடத்தியவர். குறிப்பாக எம்முடன் குடும்பரீதியாகவும் கிரியைகள் என்பவற்றில் நெருங்கிய தொடர்புடையவர். சாவகச்சேரி துர்க்கையம்மன் தேவஸ்தானத்தில் கோவில் குருக்களாக இருந்து எம்முடன் ஆற்றிய சேவை மறக்கமுடியாதது. இன்று அவர் சேவை கோண்டாவில் அரசடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறுவது போற்றத்தக்கது. அவரது பக்தி பூர்வமான சேவை என்றும் நாட்டுக்குத் தேவை. இன்று மணிவிழாக் காணும் குருக்கள் அவர்கள் சதாபிஷேக விழாவையும் காண வேண்டும். நோயற்ற வாழ்வுடன் கிரியைநெறி தவறாத சேவை என்பவற்றோடு நீடு வாழவும் அவர் புத்திரச் செல்வங்கள் நன்றாக வாழவும் எல்லாம் வல்ல விநாயகர் அம்பிகை பாதங்களை வழுத்தி வாழ்த்துகிறேன்.

வணக்கம்

(1505

## பரமபிதா காட்டிய பாதை

# மனத்தூய்மையும் மனித சேவையும் தான்

# புனிதர்களை உருவாக்கும் மதப்பண்பாகும்



இயற்கையில் இருந்து மனிதன் கற்றுக் கொள்வதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன. மற்றவர்களுக்கு கொடுப்பதை, தன்னைத் தியாகம் செய்வதை, பாகுபாடற்ற தன்மையை, மற்றவர்களை மகிழ்விக்கும் மனப்பாங்கை, எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் நற்பண்பை மனிதன் இயற்கையிடம் இருந்து கற்க வேண்டியவனாக இருக்கின்றான்.

### அன்புள்ளம் இயேசுவே

இயற்கையைப் படைத்த இறைவன் தமது வள்ளல் தன்மையையும், அரவணைக்கும் தன்மையையும் தமது அன்பு மைந்தன் இயேசுக் கிறிஸ்து மூலமாக எமக்கு எடுத்துக்காட்டி அவரைப் பின்பற்ற எம் எல்லோரையும் அழைக்கின்றார். மன்னிக்கும் அன்பு செய்யும் உள்ளமெல்லாம் இயேசுவைப் பிரதிபலிக்கும் அடையாளங்களாகத் திகழ்பவையே. இயேசு ஏழைகள், பாவிகள், ஒடுக்கப்பட்டவர்களைத்

**பி. அருள்தாசன்**

தேடிச் சென்று இறைவனுடைய அரசு உங்களைப் போன்றதே என்று அவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்களின் தேவைகளை அறிந்து உதவினார்.

### உதவும் பண்பு வேண்டும்

ஏழை நாடுகளுக்குப் பொருளாதார வளமுள்ள நாடுகள் அவைகளின் அழிவுகளிலே கை கொடுத்து உதவுகின்றன. உண்மையிலே வறிய நாடுகளுக்கு நல்லெண்ண முயற்சியுடன் உதவி செய்வனவாக இருக்குமேயானால் போரும், வன்செயல்களும் தடுக்கப்படுவதுடன் நாடுகளுக்கிடையே ஐக்கியப் பிணைப்பு உருவாகும். ஆனால் நாம் இதற்கு எதிர் மாறான பண்பையே இன்று உலகில் காண்கின்றோம். கழுத்துவரை சென்ற நோயைக் காயப்படுத்திக் குணமாக்குவதை விட புதியனவற்றுக்கு அந்நோய் வராமல் பார்ப்பதற்கான வழிவகைகளைச் செய்வதே எதிர்காலத்தை எதிர் கொள்வதற்கான வழியாகும். எனவே உலகத்தைப் பார்ப்பதற்கு முன்பு எமது குடும்பத்தை சமூகத்தை எமது கிராமத்தை நாம் மேற் சொன்ன பண்பியல்களில் வழிப்படுத்துவோமானால் எமது பணி சுலபமானது. அப்பணியால் பலனும் அதிகமாகும்.

### தூயசேவையே சமயம்

இயேசு தம் சீடர்களுக்குச் சொன்னார் ''மற்றவர்கள் என்னுடைய சீடர்கள் என்று சொல்லும் படியாக வாழுங்கள்'' சொல்லுவது யாருக்கும் எளிது. செயலில் காட்டுவது கடினமானது. இயேசு தாம் சொன்னவற்றை வாழ்ந்து காட்டினார். அதனால்தான் மக்கள் அவர் பக்கம் சென்றார்கள். ''மனித சேவையில் கரங்களை அழுக்காக்கி, மனதைத் தூய்மையாக வைத்திருப்பதே சமயமாகும். சார்லஸ் கால்டன் என்ற அறிஞன் கூறுகிறார், மனிதனுக்குச் சேவை செய்ய நாமும் எப்போது எம்மைக் கொடுக்க ஆயத்தமாக இருக்கின்றோமோ அப்போதுதான் எம்மிடையே வேற்றுமைகள் மறைந்து ஒற்றுமைத் தளிர்கள் வளர ஆரம்பிக்கும்.''

# மனிதனின் குண இயல்புகளை அப்பட்டமாக

# வெளிக் கொணரும் எண் சோதிடக் கலை

**பேராசிரியர் என். சாமி**

[சென்றவாரத் தொடர்ச்சி]

### பிறந்த எண் 9-விதி எண் 1

இவர்கள் பத்திரிகை, கற்கள், எழுத்துத் தொழில் மூலமாகவும் முன்னேறலாம். மற்றும் ஒப்பந்த வேலைகள் நெருப்பு சம்பந்தமான தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இது

## சோதிடபலன்

சம்பந்தமான தொழில் செய்யும் இடங்களில் வேலைக் கமர்ந்து பெரும் பொருள் பெறலாம்.

### பிறந்த எண் 9 விதி எண் 2

இவர்கள் எழுதுதல், பத்திரிகை, ஆடம்பரப்பொருள்கள் போன்றவற்றில் நல்ல பொருள் ஈட்டுவர். மற்றும் பச்சைப் பொருள், கமிஷன், ஒப்பந்த வேலைகள், வாகனங்கள் போன்ற தொழில்களில் முன்னேறுவர். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து நல்ல வருமானம் பெறுவர்.

### பிறந்த எண் 9-விதி எண் 3

இவர்கள் கட்டடத் தொழில், எழுதுதல், பேசுதல் போன்றவற்றால் பொருள் ஈட்டுவர். மற்றும் கற்கள், ஒப்பந்த வேலைகள், எண்ணெய் வியாபாரம், பல்பொருள் வியாபாரம் போன்றவற்றாலும் உயர்வடைவர். அல்லது இவைசம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து பெரும் பொருளீட்டுவர்.

### பிறந்த எண் 9-விதி எண் 4

இவர்கள் எழுத்தாலும், பேச்சாலும் நல்ல பொருள் ஈட்டலாம். மற்றும் கற்கள், வாகனம் ஒப்பந்த வேலைகள் ஆகியவற்றாலும் நன்கு சம்பாதிக்கலாம். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடத்தில் வேலைக்கமர்ந்து செல்வம் சேர்க்கலாம்.

### பிறந்த எண் 9-விதி எண் 5

இவர்கள் கட்டடத் தொழில், ஏற்றி இறக்குதல் தொழில் மூலம் நன்கு சம்பாதிப்பர். மற்றும்விவசாயம், கமிஷன், ஒப்பந்தத் தொழிலிலும் முன்னேறலாம். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து பெரும் பொருள் ஈட்டலாம்.

### பிறந்த எண் 9-விதி எண் 6

இவர்கள் ஆடம்பரம் சம்பந்தமான பொருள்கள், ஏற்றி இறக்கும் தொழில் போன்றவற்றில் செல்வம் குவிக்கலாம். மற்றும ஒப்பந்த வேலைகள், கட்டடத் தொழில் போன்றவற்றிலும் முன்னேறலாம். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து பெரும் பொருள் ஈட்டலாம்.

### பிறந்த எண் 9-விதி எண் 7

இவர்கள் விவசாயம், இரும்புத் தொழிலில் மேன்மையடையலாம். மற்றும்வாகனம், ஒப்பந்த வேலைகளினாலும் முன்னேற்றம் அடையலாம். அல்லது இவைசம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து செல்வம் குவிக்கலாம்.

### பிறந்த எண் 9-விதி எண் 8

இவர்கள்பால்ப் பண்ணை, இரும்பு, விவசாயம் போன்றவற்றில் மேன்மையுறலாம். மற்றும் ஒப்பந்த வேலைகள் கட்டடத் தொழில், பல்பொருள் வியாபாரம போன்றவற்றாலும் பெரும் பொருள் ஈட்டலாம். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து செல்வம் சேர்க்கலாம்.

### பிறந்த எண் 9-விதி எண் 9

இவர்கள் கலை நுணுக்கத் தொழில், கட்டடத் தொழில் மூலம் செல்வம் குவிப்பார்கள். மற்றும் பல்பொருள் வியாபாரம், கமிஷன், ஆடம்பரப் பொருள் விற்பனையினாலும் செல்வம் சேர்ப்பர். அல்லது இவை சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக் கமர்ந்து பெரும் பொருள் ஈட்டலாம்.

## இராசி பலன்

18 02 2001
(மாசி 6 ஞாயிறு)
ஏகாதசி பி ப. 6 06 வரை
மூலம் பி இ 7 53 வரை
ராகுகாலம் 9 33 – 11 03
சுபநேரம் 3 33 – 5.03
அமிர்த சித்தம், ஏகாதசி விரதம்

**மேடம்**
இறுக்கமான சூழல், பிரயாணம், வயிற்றுக்கோளாறு. முயற்சி நன்மை.

**இடபம்**
எதிர்பாராத பிரச்சினை, வியாதி ஏற்படல், பிரயாணம், காரிய தடங்கல்.

**மிதுனம்**
போசனசுகம், செல்வாக்கு, வாகனவசதிமுயற்சி, கைகூடல்

**கடகம்**
காரியம் கைகூடல், சுகவாழ்வு, தனவரவு, சத்துரு ஜெயம்.

**சிங்கம்**
குடும்பக் கவலை, முயற்சி மந்தம், தாழ்வு நிலை, வியாதி

**கன்னி**
பயந்த சுபாவம், தன்னம்பிக்கைக்குறைவுஎதிர்பாராத நன்மை, முயற்சி ஜெயம்.

**துலாம்**
பிரயாணம், தனவரவு, காரியம் கைகூடும், அன்னியர் சந்திப்பு.

**விருச்சிகம்**
தனவிரயம், முயற்சி தாமதம், கௌரவக் குறைவு, வாக்குப் பகை.

**தனுசு**
ஆழ்ந்தசிந்தை, அரச நன்மை, ஜனவசியம், சயன சுகம்.

**மகரம்**
பிரயாணம், காரிய தாமதம், சயனசுகம், பொருள் விரயம்.

**கும்பம்**
நினைத்தகாரியம்கைகூடும், மனமகிழ்ச்சி, பொருள்வரவு, கௌரவம்.

**மீனம்**
தொழிற்சிறப்பு, அதிகார நிலை, காரிய ஜெயம், பிறர் உதவி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

## கண் சிகிச்சை சீரில்லை

(மாங்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண் சத்திரசிகிச்சை பெற வேண்டிய சுமார் 2 ஆயிரம் பேர் உள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ச. விக்னேஸ்வரன் தெரிவித்தார். (உ-3)

### சண்டிலிப்பாய்

## பி.செ. பிரிவில் 24சமுர்த்தி செயலணிகள் அமைப்பு

[யாழ்ப்பாணம்]

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களால் இதுவரை 24 சமுர்த்தி செயலணிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாத இறுதிக்குள் மேலும் 4 செயலணிகள் அமைக்கப்பட்டு விடுமென சமுர்த்தி உத்தியோகத்தர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மானிப்பாய் வடக்கு ஜே/147, மானிப்பாய் மேற்கு ஜே/140, சில்லாலை வடக்கு ஜே/148, சில்லாலை தெற்கு ஜே/149 ஆகிய பகுதிகளிலேயே செயலணிகள் அமைக்கப்பட்டவுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (உ-12)

## வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

கனடாவாழ் இணுவில் மக்கள் ஒன்றிய அமைப்பாளர்களில் ஒருவரான கந்தையா அருட்சோதியை வரவேற்கும் வைபவம் இன்று இணுவில் இந்துக்கல் லூரியில் நடைபெறவுள்ளது. (உ-7)

## ஐரோப்பிய நாடுகளுக்கு ஜனாதிபதி பயணம்?

(கொழும்பு)

கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மீண்டும் மூன்று வாரங்களுக்குவிஜயம்செய்யத்திட்டமிட்டுள்ளதாக ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்அறிக்கையில் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப் படவுள்ள இக்காலப்பகுதியில் நிதியமைச்சரான ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு செல்வது கடமைகளைப்புறக்கணிக்கும் செயலாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் குறை கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. [உ-4]

## ஊர்காவற்றுறையில் குடியிருப்புத் திட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் ''தேவாநகர்'' என்ற பெயரில் புதிய குடியிருப்புத் திட்டம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் நிதியைப் பயன்படுத்தி நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள இக் குடியிருப்புத் திட்டத்தில் 60 வீடுகள் அமைக்கப்படவிருப்பதாக பிரதேசசபைத் தலைவர் என். மதனராஜா தெரிவித்துள்ளார்.

கரம்பொன் மேற்கில் அமையவுள்ள இக் குடியிருப்பு திட்டத்திற்கென முதற் கட்டமாக 30 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இவ்வருட நடுப்பகுதியில் திட்டம் பூர்த்தியடைந்து மக்கள் குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என பிரதேச சபைத்தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-75)

## பாடநூல் விநியோகம்

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான இலவசபாடப் புத்தகங்கள் நாளை திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படும் எனவலய கல்விப்பணிப்பாளர் எஸ். சிவராசா தெரிவித்துள்ளார்.

பாடப்புத்தகங்கள் தரம்பிரிக்கப்படுவது முடிவடைந்துவிட்டதை அடுத்து அந்தந்த கோட்டக் கல்வி அலுவலங்களுக்கு ஊடாக இவை விநியோகிக்கப்படவுள்ளது (உ-23

# புலிகளைத் தடைசெய்வது பற்றி

# ஐ.தே.க. கருத்துகூற விரும்பவில்லை

## செய்தியாளர் மாநாட்டில் அத்துக்கோறளை

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பேச்சுவார்த்தை நடைபெற்று வரும் இத்தருணத்தில் பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகளைத் தடை செய்வது குறித்து எவ்வித கருத்தையும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்க விரும்பவில்லை. இவ்வாறு கட்சியின் உப தலைவர் காமினி அத்துக் கோறளை தெரிவித்துள்ளார்

எதிர்க்கட்சி தலைவரின் உத்தியோக பூர்வ வாசஸ் தலத்தில்இடம் பெற்ற செய்தியாளர் மகாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தியாளர் மகாநாட்டில் அவர்மேலும் தெரிவிக்கையில்;

நோர்வேயின் அனுசரணையுடன் தற்போது சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் விடுதலைப் புலிகளின் தடைபற்றிக் கருத்துத் தெரிவித்தால் அது சமாதான முயற்சியைக் குழப்பி விடும் என்று அரசாங்கம் எம்மைக் குற்றம் சாட்டும். இதனால் புலிகளி॰ தடை தொடர்பாக எதுவித கருத்தும் கூறவிரும்ப வில்லை என்று காமினி அத்துக் கோறளை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கை எடுத்தாலும் அரசுக்கெதிரான ஐக்கியதேசியக் கட்சியின் நடவடிக்கைகள் தொடரும் எனவும் தெரிவித்துள்ளார். (வ)

## வேலணை வைத்தியசாலை

# வசதிகளை அதிகரிக்கக் கோரி

# அமைச்சர் டக்ளஸிற்கு மகஜர்

(மண்டைதீவு)

வேலணைப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் பணிகள் முனைப்புப் பெற்றுள்ள இவ் வேளையில், உயிர்காக்கும் பணியின் உறைவிடமாக திகழும்எமது வைத்தியசாலையின் பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படாது இருப்பது எமக்கு மிகவும் கவலையளிப்பதாகவுள்ளது.

வேலணையில் இயங்கும் கிராமிய வைத்தியசாலையின் வசதிகளை அதிகரிக்கக்கோரி வேலணைப் பிரதேச மக்கள் சார்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளதாவது,

வேலணை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மேலதிக வைத்தியசேவை தேவைப் படும் பிரசவத் தாய்மார் மற்றும்நோயாளர்கள் ஆகியோர் இரவு வேளைகளில் படும் துன்பம் அளவிட முடியாதது.

வைத்தியசாலைக்கென அம்புலன்ஸ் வண்டி ஒன்று இருக்குமானால் இவ்வாறான துன்பங்களைத் தவிர்க்க இயலும்.

எமது வைத்தியசாலைக்கு தொலைபேசி வசதி இருக்குமானால், ஊர்காவற்றுறை வைத்திய சாலையுடன் தொடர்புகொண்டுஅங்குள்ள அம்புலன்ஸ் வண்டியின் உதவியைப்பெற்று ஓரளவுக்காயினும் தாமதமற்ற மேலதிக வைத்திய சேவையை பெற முடியும்.

எம்மால் முன் வைக்கப் பட்ட பிரச்சினைக்குவிரைந்து தீர்வளிக்க முற்பட வேண்டும் எனவும் அக் கோரிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது (உ-11)

# பிரிட்டிஷ்அரசிற்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

பிரிட்டிஷ் அரசுவிடுதலைப் புலிகளைத் தடை செய்யத் தவறினால் இச் செயலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு சிஹல உறுமயக் கட்சியின் செயலாளர் திலக் கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் நீதி மன்றம் மூலமே இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள சிஹல உறுமய திட்டமிட்டிருப்பதாகவும், சட்ட நடவடிக்கைக்குத் தேவையான 10 ஆயிரம் பவுண்ஸ் பணத்தை திரட்டுவதில் சிரமங்கள் எதுவும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார். (செ)

## போட்டிகள்

(ஊர்காவற்றுறை)

வேலணைக் கல்விக்கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்து, கரப்பந்துப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை யா/வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றன. (உ-75)

# ஓடும் பேருந்தில் வைத்து இளைஞர் சுட்டுக்கொலை

[கொழும்பு]

ஓடும் பேருந்தில் வைத்து இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

திக்குவல்லைப் பகுதியில் கடந்த புதனன்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது;

பழி வாங்கும் முகமாகவே இவரது கொலை இடம்பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதேவேளை, கொலையாளியை இனம் கண்டு பொலிஸார் கைது செய்துள்ளனர். (உ-9)

## வீடு கட்ட நிதி

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறைப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள எழுவை தீவில் 42 பேருக்கு வீடு கட்டுவதற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்புஅதிகார சபையினால் 42பேருக்கு முதற் கட்டக் கொடுப்பனவாக பத்தாயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளதாக எழுவை தீவு கிராம அலுவலர் இ.ராஜதுரை தெரிவித்துள்ளார். உ-75]

## ஊர்காவற்றுறையில்

# வீதி ஒழுங்கு பேணுவதில் பொலிஸார் முனைப்பு

[ஊர்காவற்றுறை

வீதி ஒழுங்கினைக் கடைப்பிடிக்கக் கோரும் துண்டுப்பிரசுரங்களை ஊர்காவற்றுறை பொலிஸார் சம்பந்தப்பட்ட பகுதி மக்களிடையே விநியோகித்து வருகின்றனர்.

வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கானவீதி ஒழுங்கு முறைகள் என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரங்களையே ஊர்காவற்றுறைப் பொலிஸார் விநியோகித்து வருகின்றனர்.

பாதசாரிகள், வாகனச் சாரதிகள் ஆகியோர் வீதி ஒழுங்கை கடைப்பிடிப்பது எங்கனம் என்பது குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளதுடன்,

வாகனசாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருக்க வேண்டியதன் அவசியப்பாடு குறித்தும் அத்துண்டுப்பிரசுரத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ-75)

## நோர்வே நிதியுதவி

(கொழும்பு)

நோர்வே அரசு இலங்கைக்கு 13 கோடிரூபா நிதி உதவியினை வழங்கவிருக்கிறது.

குப்பை கூழங்களை சுத்திகரிக்கும் நிலையமொன்றை நிறுவுவதற்காகவே இந் நிதி பயன்படுத்தப்படவுள்ளது. (உ-3)

## பத்திரிகை படிக்கும் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் பிரார்த்தனை மண்டபத்தில் மாணவர்முன்நிலையில் அன்றைய தினசரிகள் வாசிக்கப்படும் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது;

இந்நடை முறைக்கு பெற்றோர் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர் பேராதரவை வழங்கி வருவதுடன்,

ஏனைய சில பாடசாலை நிர்வாகத்தினரும் பத்திரிகை வாசிக்கும் வழக்கத்தினை புகுத்துவதற்கு முயன்று வருவதாய் தெரியவந்துள்ளது. [உ-124]

# சித்திரவதை தொடர்பான விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

சித்திரவதை தொடர்பான முறைப்பாடுகள் குறித்த விசாரணைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்காக கொழும்பில் இருந்து வந்துள்ள குற்றப் புலனாய்வுக் குழுவினர் யாழ் பொலிஸ் நிலையம் மற்றும் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் என்பவற்றில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டிருக்கும் 155 பேரில், வலம்புரியில் வெளியாகாத ஏனையோரின்விபரம் வருமாறு.

துரைராஜா தசிஜீபன்- சுதுமலை தெற்கு மானிப்பாய், தர்மலிங்கம் புவனேந்திரன்- கச்சாய் வீதி, கொடிகாமம்,அல்போன்ஸ் அன்ரன்- இல 1 மத்திய கிழக்கு வீதி, குருநகர், மதன் ஜே. கதீஸ்வரன்- சாவகச்சேரி, கந்தையா புஸ்பராஜா- நாவற்குழி தச்சன்தோப்பு, இரத்தினம் கிருஸ்ணகுமார்- தொல்புரம் மேற்கு சுழிபுரம், சுப்பிரமணியம் இராசலிங்கம்- மூளாய் சுழிபுரம், கந்தவனம் சிவராசா- மடத்தடி, சாவகச்சேரி வடக்கு,

பரமேஸ்வரன் குமுதினி. பி. பரணீதரன்- பாடசாலை வீதி, சங்கரத்தை வட்டுக்கோட்டை, ஜீவநாயகம் மதியழகன்-தொல்புரம் சுழிபுரம், அந்தோனிமுத்து கண்ணன்- அம்மன் கோயிலடி, சாவகச்சேரி வடக்கு, தனானந்தன் ரவீந்திரன்- 87/1 பிரதான வீதி, யாழ்ப்பாணம், நடனசரா சாந்தரூபன்- சுதுமலை தெற்கு, சுப்பிரமணியம் முகுந்தகுமார் 6, பலாலி வீதி, யாழ்ப்பாணம். சிவானந்தன் ரமணன்- மீசாலை கிழக்கு மீசாலை,

காசித்தம்பி தர்மதாசன்- மீசாலை கிழக்கு மீசாலை, ஆறுமுகம் அமலன்- அத்திபடி வீதி, கச்சேரி வீதி கொடிகாமம், அகிலேஸ்வரன் அமலராஜ்- அக்கராயன்குளம், மரியம்பிள்ளை ஞானராஜா- பிடாரி கோயிலடி, ஆனைக்கோட்டை, முத்துத்தம்பி கெங்காதரன்- கமலாசினி வீதி, சரசாலை தெற்கு, வேலுப்பிள்ளை உதயகுமார்- வாவி கொடிகாமம் வடக்கு, வினாசித்தம்பி கணேசமூர்த்தி- சுழிபுரம் மத்தி

செல்வரட்ணம்ஜெபசீலன்- சந்திரபுரம், மட்டுவில் வடக்கு, சரஸ்வதி சௌந்தரராஜன்- சந்திரபுரம், மட்டுவில் வடக்கு, அரியகுட்டி ஜெயந்தன்- கோட்டைக்காடு, மல்லாகம், அப்புத்துரை ஸ்ரீகரன்- 112/ஏ மோகன்தாஸ் வீதி, சந்திரபுரம் சாவகச்சேரி, செல்வரட்ணம் பார்த்தீபன்- 57, ஆனந்தவடலி, மூன்றாம் ஒழுங்கை கொழும்புத்துறை, நல்லசேகரம்பிள்ளை மணிவண்ணன்- வாழையடி வீதி, மட்டுவில் தெற்கு, கணேஸ் ரமேஷ்- நாவற்குழி தெற்கு,

அல்லேலூயாமேரி ஜேம்ஸ்- ஓடக்கரை வீதி, குருநகர், சந்திரசேகரம் புவனேந்திரன்- மீசாலை கிழக்கு, நடராஜா புத்திரராஜா- கோப்பாய் மத்தி, பொன்னம்பலம் கண்ணதாசன்- தச்சன் தோப்பு, பண்டார இரத்தினம் செல்வகுமார்- தச்சன் தோப்பு கைதடி, நடராஜா விநாயகமூர்த்தி- முல்லையடி பளை, சின்னத்தம்பி ஜெயபாலன்- பன்னாலை, தெல்லிப்பழை, பொன்னுக்கோன் குகதாஸ்- கௌரிபவன், வீமம் காமம், தெல்லிப்பழை,

பெர்னான்டோ ஜெயக்காந்தன்- 43/2 புதுவீதி, கொய்யாத்தோட்டம், சிதம்பரபிள்ளை பேரின்பநாதன். நாவற்குழி தெற்கு, செல்லத்துரை குமார்- 31, பூங்கா வீதி, குருநகர், ஆர். குணரட்ணம்- நாகர் கோயில் கிழக்கு, தம்பன் பாஸ்கரன்- கைதடி வடக்கு, ஜெயானந்தம் ஜெனகன்- 18, குமார வீதி, நல்லூர், நவம் ஜெகதீஸ் ஜெபதீபன்- 4, ஈச்சமோட்டை வீதி, சாவகச்சேரி,

சின்னத்தம்பி ஜெயேந்திரன்- மீசாலை வடக்கு, கனகரட்ணம் நாகேந்திரன்- மீசாலை வடக்கு, அப்புக்குட்டி நடராஜா- மீசாலை வடக்கு, இராமலிங்கம் ஸ்ரீஸ்கந்தராஜா- சாவகச்சேரி வடக்கு, மீசாலை, தர்மலிங்கம் சுதாகரன்- இலந்தைக்குளம் கொழும்புத்துறை, நடராஜா ஜெயராஜா- 785, கண்டி வீதி, அரியாலை, கணபதிப்பிள்ளை யோகராஜா- 1046 மத்திய சனசமூக நிலையம் அச்சுவேலி வடக்கு,

வேதநாயகம் ஜெறோம் இமாலியானஸ்- 17, கொட்டடி வீதி யாழ், நவரட்ணராஜா முரளீதரன்- பங்களா வீதி, மீசாலை மேற்கு, சின்னையா சோமஸ்கந்தர்- புனித அந்தோனியார் வீதி சுன்னாகம், செல்வராஜா பிரதீபன் அலைஸ் ரமணன்- 57. ஆனந்தம் வடலி 3ம் வீதி, கொழும்புத்துறை, பொன்னன் ரவீந்திரன்- கைதடிச் சந்தி, நடராஜா அகிலீசன்- சரசாலை தெற்கு,

சின்னத்தம்பி சிவகுமார்- நாவற்குழி கிழக்கு, தச்சன் தோப்பு, செல்வராஜா பிரபாகரன்- கோயிலாக் கண்டி மத்தி, தச்சன் தோப்பு, கொன்ஸ்ரன்ரைன் றோய் மஸ்மேரி சுகந்தி- 15/3 டேவிட் வீதி யாழ், மிக்கேல் பேர்ணாட் ஜோன்சன்- 7/1 புதிய வீதி, கொய்யாத்தோட்டம், பொன்னுத்துரை மகாதேவன்- வைரவர் கோயிலடி கச்சாய் தெற்கு, கே. உதயகுமார்- 16/2 லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை, சபாரட்ணம் ராஜேந்திரகுமார்- சரசாலை தெற்கு, கதிரவேலு ஜனந்தன்- சங்கரத்தை, வட்டுக்கோட்டை, ஜோன்புள்ளே அன்ரன் அமலநாதன்- நாவற்குழி. (உ-8)

## அன்பளிப்பு

(கொழும்பு)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு, சிறுநீரக பரிசோதனைக் கருவிகள் நான்கினை கொழும்பிலுள்ளஇருலயன்ஸ் கழகங்கள் இணைந்து வழங்கவுள்ளன.

இக்கருவி ஒன்றின் பெறுமதி இரண்டு மில்லியன் ரூபாவாகும்.

இக்கருவிகள் அவுஸ்திரேலிய லயன்ஸ் கழகத்தின் ஊடாக தருவிக்கப்பட்டுள்ளன. [செ]

## சூழலைப் பாதுகாப்போம்

[ஊர்காவற்றுறை]

காரைநகர் வட மேற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை சூழல் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு ஒன்று இடம் பெற்றது.

இப் பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ந. பாரதி தலைமையில் இடம்பெற்ற சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் காரைநகர் சூழல் பாதுகாப்பு கழகத் தலைவர் மு. சோமசுந்தரம் கருத்துரையினை வழங்கினார். (உ-75)

## இன்று ஒரு தகவல்

### பிரார்த்தனையின் பலன்

ஒரு பெரியார் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அப்போது அவர் தம்மை யாரோ ஒருவன் அழைக்கவே திடுக்கிட்டு எழுந்தார். வந்தவன் 'எழுந்திருங்கள் பிரார்த்தனைக்கு நேரம் ஆகி விட்டது' என்றான். பெரியார் 'நீயாரப்பா? உனக்கு என்மேல் ஏன் இவ்வளவு அக்கறை' என்று வினாவினார்.

'நான் தான் சைத்தான்' என்றான் வந்தவன். பெரியாருக்கு ஆச்சரியம், நீ எல்லோரையும் தூங்கச் செய்து, பிரார்த்தனை செய்ய விடாமல் தடுப்பவனாயிற்றே, என்னை மட்டும் எழுப்பிப் பிரார்த்தனைசெய்யச் சொல்கிறாயே என்ன காரணம்?' என்றார்.

அதற்குச்சைத்தான் 'நேற்று நீங்கள் பிரார்த்தனை செய்யத் தவறிவிட்டீர்கள். அதனால் மிகவும் வருத்தப்பட்டு அழுதீர்கள். கடவுள் நீங்கள் வருந்தியதைக் கண்டு மனமிரங்கி நீங்கள் பிரார்த்தனை செய்திருந்தால் உங்களுக்குக் கிடைத்திருக்க வேண்டிய பலன்களைக் காட்டிலும் அதிகமான பலன்களை உங்களுக்குக் கொடுத்து விட்டார் இன்றும் நீங்கள் உறங்கி விட்டால் மறுபடியும் அழுது அதிகமான நன்மைகளைப்பெற்று விடுவீர்கள். அதனால் தான் எழுப்பினேன் என்றானாம்.

இறைவனை நினைத்துத் தொழுவதாலும், அழுவதாலும் அதிகநன்மைஏற்படுமென்பது இதனால் புலனாகிறது.

நன்றி
தெய்வீகக்கதைகள்

# வலிகாமம் வடக்கு சுவீகாரம் அரசின் அடக்கியாளும் தந்திரம்

## சங்கரி எம். பி. கொதிப்பு

(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேசங்களில் படையினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்களை வேறு இடங்களில் நிரந்தரமாகக் குடியமர்த்த மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

பலாலிஇராணுவத் தலைமையகத் சுற்றாடலில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலய பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 70 ஆயிரம் குடும்பங்கள் கடந்த 10 வருடகாலமாக இடம்பெயர்ந்து வாழ்கின்றார்கள்.

இக் குடும்பங்களை வேறு இடங்களில் நிரந்தரமாகக் குடியமர்த்துவதற்காக அரச தனியார் காணிகளை கொள்வனவு செய்யுமாறு அரசாங்கம் யாழ். மாவட்டச் செயலாளரைப் பணித்துள்ளது

இதன் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாவட்டச் செயலாளர் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்த சங்கரி ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

படையினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள இந்தப் பிரதேசத்தில் வரலாற்று சிறப்பு மிக்க இந்து ஆலயங்களும் புனித தீர்த்தங்களும் அமைந்துள்ளன.

பாதுகாப்பு வலயங்களை மாற்றிக்கொள்ள முடியும் ஆனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களை மாற்ற முடியாது.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது சொந்த இடங்களிலேயே மீளக்குடியமர வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள் என்றும்.

தலதா மாளிகையையோ அல்லது புனித மஹா போதியையோ இடமாற்றம் செய்ய முடியுமா? ஹொர ஹொல்ல தோட்டத்தை எந்த விலைக்கும் விற்கத் தயாரா? என்றும் அக்கடிதத்தில் சவால் விடுத்துள்ளார்.

தற்போது யுத்தம் முடிவுக்கு வருகின்ற அறிகுறிகள் தென்படும் போது ஏன் இந்த கபட நாடகம்? தமிழ் மக்களை அடக்கியாளும் உத்தேசமா? என்று வினாவெழுப்பியுள்ள அவர்,

அப்படியானால் அதனை தெரியப்படுத்துங்கள் என்றும் தனது கடிதத்தில் ஜனாதிபதியைக் கோரியுள்ளார்.

(உ)

# மரவேலைப் பயிற்சி மாணவர்க்கு பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தொழிற் துறை திணைக்களத்தின் மரவேலைப் பயிற்சிப் பாடசாலைகளில் பயிற்சி நெறியினைத் தொடர்ந்த மாணவர்களிற்கு பரீட்சைகள் நடத்தி சான்றிதழ் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே மேற்படி பரீட்சையில் தோற்ற விரும்புகின்ற மாணவர்கள் இம்மாதம் 28 ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்னதாக உடுவில் மரவேலைப் பாடசாலை அல்லது யாழ் மரவேலைப் பாடசாலைப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

(உ)

# சித்திரவதை தொடர்பான விசாரணைகளுக்கு மேலும் முந்நூறு பேர்?

[யாழ்ப்பாணம்]

சித்திரவதைகள் தொடர்பானமுறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்வதற்கென தற்போது அழைக்கப்பட்ட 155 பேர் தவிர மேலும் 300 பேர் விசாரணைகளுக்காக அழைக்கப்படவுள்ளதாகவும், அவர்களின் பெயர்விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படுமெனவும் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இதே வேளை, அச்சுவேலி, நெல்லியடி, வல்வெட்டித்துறை, கொடிகாமம் பகுதிகளைச் சேர்ந்த முறைப்பாட்டாளர்களை நேற்றுமுன்தினம் முதல் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு சமுகமளித்து வாக்குமூலங்களைப் பதிவு செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளமை தெரிந்ததே.

இது தவிர விசாரணைகளை மேற்கொள்வதற்கு வசதியாக தெளிவாகத் தமிழ் பேசத் தெரிந்த உத்தியோகத்தர்கள் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் யா/பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[உ-12]

# யாழ் வைத்தியசாலையில் ஒட்சிசன் தட்டுப்பாடு இருவர் உயிரிழப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் ஒட்சிசன் இல்லாமையினால் 38 நாள் ஆண் குழந்தை ஒன்றும் 68 வயதுநிரம்பிய பெண்ணொருவரும் இறந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலைக்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் நோயாளர் கப்பலிலே மருந்து வகைகள் எடுத்துவரப்படுவது வழக்கமாகும். ஆயினும் கடந்த இரு சேவைகளிலும் குறித்த வைத்திய சாலைக்கு மருந்து வகைகள் கொண்டுவரப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை யாழ்போதனா வைத்தியசாலையில் முக்கியமான 32 வகையான மருந்துகளுக்கான தட்டுப்பாடு தொடர்ந்தும் இருந்து வருவதாகவும் அறியப் படுகின்றது,

(ந-77

# தொடரும் தொலைபேசி சீர்கேடு

(செம்பியன்பற்று)

வடமராட்சிப் பகுதியில் சுமார் மூன்று வாரங்களாக கேபிள் தொலைபேசிகள் யாவும் செயலிழந்து காணப்படுகின்றன.

இதனால் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதில் மக்கள் பெரும்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

(உ42)

# 21,22 ஆம் திகதிகளில் கீரிமலைக்கு விசேட போக்குவரத்து சேவை

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வழமை போல் இம்முறையும் பக்தர்கள் நலன் கருதி 21, 22 ஆம் திகதிகளில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் கீரிமலைக்கு போக்குவரத்துச் சேவைகளை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொளளப் பட்டுள்ளன.

மேற்படி தினங்களில் தெல்லிப்பழையில் இருந்து கீரிமலைக்கும் சேந்தாங்குளத்தில் இருந்து கீரிமலைக்கும் விசேட சேவைகள் நடத்த தீர்மானிக்கப்பட்டுளளதால்,

பக்தர்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைப்பதற்காக கீரிமலைக்குச் செல்லும் போதே சென்று திரும்பி வருவதற்கான இருவழிக்கட்டணமாக தெல்லிப்பழையில் இருந்து கீரிமலைக்கு 15 ரூபாவும், சேந்தாங் குளத்தில் இருந்து இருவழிக்கட்டணமாக 10 ரூபாவும் பயணச்சீட்டிற்கு பணம் அறவிடப்படும் என வ பி. போ. ச. பொது முகாமையாளர் அறிவித்துளளார்.

அத்துடன் பருத்தித்துறையிலிருந்து தெல்லிப்பழைக்கும் கரைநகரிலிருந்து சேந்தாங் குளத்திற்கும் சேவைகள் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[உ

# பயிர்களில் நோய்த் தாக்கம்

(ஆவரங்கால்)

கடும் பனிமற்றும்வெய்யிலினால் வெங்காயம், கோவா, கரட், தக்காளி, புகையிலை ஆகிய பயிர்களில் பலவித நோய்த்தொற்றல்களைஅவதானிக்க முடிகிறது.

இடைக்காடு, பத்தமேனி, வளலாய், கதிரிப்பாய், புத்தூர், நவக்கிரி, ஊரெழு புன்னாலைக்கட்டுவன் ஆகிய பிரதேசங்களில் இந்நிலை காணப்படுகின்றது.

(உ-57)

# மீள் பயிற்சியின்போது 23 இராணுவத்தினர் தப்பியோட்டம்

(கொழும்பு)
[மட்டக்களப்பு]

ஸ்ரீலங்கா இராணுவத்திலிருந்து தப்பியோடி கைதுசெய்யப்பட்டவர்களில் 23 பேர் அண்மையில் மீள் பயிற்சியின் போது தப்பியோடியுள்ளதாக அறிய முடிகிறது.

ஏற்கனவே இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களில் கைது செய்யப்பட்ட 83 பேர் கடந்த வியாழக்கிழமை மிஹிந்தலை இராணுவ பயிற்சி முகாமுக்கு மீள் பயிற்சிக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்களில் 23 பேர் பயிற்சி நடவடிக்கையின் போது கூட்டாக தப்பியோடியுள்ளனர்.

இதனையடுத்து இராணுவத்தினர் மிஹிந்தலைப் பிரதேசத்தில் வீதிப்போக்குவரத்து தடைகளைப்போட்டு பாரிய சுற்றி வளைப்புத்தேடுதல்களை மேற்கொண்டுள்ள போதிலும் 5 பேர் மட்டும் இது வரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

(உ)

# நூல்கள் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

திருமதி கோகிலா மகேந்திரன் ஆக்கிய 'விஞ்ஞானக் கதைகள்' பண்டிதர் சி. அப்புத்துரையின் 'நற்சிந்தனைகள் நாற்பது' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டுவிழா இன்று மு. ப. 9. 30 மணிக்கு யா/ஸ்கந்தவரோதய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

சைவப்புலவர் சு. செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில்,

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கின்றனர்.

[உ]

# தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் 12 மணிநேர பஞ்சபுராணம் ஓதல்

(மட்டக்களப்பு)

மகாசிவராத்திரிதினமாகிய எதிர்வரும் புதன் கிழமை மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் சமாதானம் வேண்டி மாலை 6.00 மணி முதல் மறுநாள் காலை 6.00 மணி வரை 12மணிநேரபஞ்ச புராணம் ஓதப்படவுள்ளது.

கொக்கட்டிச் சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிவராத்திரி 4 சாமப் பூசைகளின் போது பஞ்ச புராணம் ஓதல் நிகழ்ச்சி நடைபெறும் என ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.

அரசும்விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்தம் செய்து சமாதானப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும்.

பிரித்தானியா விடுதலைப் புலிகளை தடை செய்யக் கூடாது என்பதற்காகவும் விசேட பிரார்த்தனையும் அன்றையதினம் நடைபெறும் என்றும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.

(உ)

# அரசு காட்டும் பாரபட்சம் தமிழ்க்கட்சிகள் கண்டனம்

[கொழும்பு]

தமிழ் மக்களுக்கு ஒரு சட்டமும் சிங்கள மக்களுக்கு ஒரு சட்டமுமாக இலங்கை அரசு பாரபட்சம் காட்டுவது முற்றிலும் தவறானது என தமிழ்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன:

விடுதலைப்புலிகளைத் தடைசெய்யவேண்டும் எனக்கோரி சிஹல உறுமயக்கட்சி நடத்திவரும் கையெழுத்து வேட்டைக்கு ஆதரவளித்து வரும் அரசு; நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக விடுதலைப்புலிகளைத் தடைசெய்ய வேண்டாம் எனக்கோரி வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் கையெழுத்துப் பெற்றமையைத் தடைசெய்தது முற்றிலும் தவறானது.

இது ஜனநாயக விரோதச் செயலாகும் எனவும் இத்தமிழ்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

[செ]

# ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

இவ்வாண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பாக தனியார்துறை அதிகாரிகள் தனியார்துறை வர்த்தகர்கள் மற்றும்அமைச்சர்களுடன் ஜனாதிபதி வெகுநேரம் கலந்தாலோசனை செய்துள்ளார்.

(உ-4)

# சீக்கியர்கள் காஷ்மீரை விட்டு ஒருபோதும் வெளியேறக் கூடாது

## இந்திய பிரதமர் உத்தரவு

(ஸ்ரீநகர்)

காஷ்மீரிலுள்ள சீக்கியர்கள் எவரும் காஷ்மீரை விட்டு வெளியேறக் கூடாது என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உத்தரவிட்டுள்ளார்.

காஷ்மீரில் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதை யடுத்து, அங்கு பலத்த குழப்பம் நிலவி வருகின்றது

இதனையடுத்தே இங்கு வாழ்ந்த சீக்கியர்கள் வெளியேறப் போவதாக அறிவித்திருந்தனர்.

இதனைத் தடுக்கும் வகையில் ஐந்து அம்சத்திட்டம் ஒன்றினை மத்திய அரசு வெளியிட்டுள்ளது

அத்துடன் காஷ்மீரில் ஒரு தலைப் பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பு ஒன்றினையும் மத்திய அரசு விடுத்திருந்தது. ஆனாலும் அதனால் எதுவித பலனும் இல்லை

சீக்கியர்களுக்கு போதிய பாதுகாப்புத் தருவதாக மத்திய உள்துறை அமைச்சகம் அளித்த உறுதி மொழிகளும் காப்பாற்றப்படவில்லை யென சீக்கியர்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சண்டை நிறுத்த அறிவிப்பை மத்திய அரசு வாபஸ் பெறுவதுடன் நிலைமையை ஆராய்ந்து அங்குள்ள சீக்கியர்களுக்குபோதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை உடனேசெய்து தரவேண்டும்.

இவ்வாறு சீக்கியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காஷ்மீரில் 167 கிராமங்களில் 60 ஆயிரம் சீக்கியர்கள் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

## சவூதி அரசினால் அமெரிக்கர் மூவருக்கு சிறைத்தண்டனை

(மனாமா)

மதுபானம் கடத்தியதாக சந்தேகத்தின் பேரில் மூன்று அமெரிக்கர்களுக்கு சவூதி அரேபியாவில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சவூதிஅரேபியாவின் கிழக்குப் பகுதியில் அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதும் எப்போது சிறையில் அடைக்கப்பட்டனர் என்ற விபரம் மற்றும் பெயர், விபரங்களும் வெளியிடப்படவில்லை. (உ3

## மே மாதத் தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி?

(இலண்டன்)

எதிர்வரும் மே மாதம் பிரிட்டனில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி பெறும் வாய்ப்பு இருப்பதாக நம்பப்படுகிறது.

அடுத்த மூன்று தினங்கள் கிளாஸ் கோவில் நடைபெற விருக்கும் தொழிற்கட்சி மாநாட்டில் ஆளுங்கட்சித் தலைவர்கள் தங்கள் பொருளாதார சாதனையில் உறுதியாக இருப்பார்கள்.

இது மே மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி பெறக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார வளர்ச்சிக்கான தங்கள் சாதனையை அல்கோர் வெளிப்படுத்த தவறியமையினாலேயே ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்றார் என அமெரிக்க விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஆனால் பிரிட்டிஷ் தொழிற்சங்க தலைவர்கள் இத்தவறை செய்யமாட்டார்கள் என்றும் கூறப்படுகிறது (செ)

## இந்தியா -பாக் இடையே பேச்சுவார்த்தை தொடர அமெரிக்க அதிபர் முயற்சி

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையேயான பேச்சுவார்த்தையை மீண்டும் தொடர தாம் முயற்சிக்கப் போவதாக அமெரிக்க புதிய ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு இது தொடர்பாக அவர் அனுப்பிய கடிதத்தில்,

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் வழிகாட்டு தலைதனது அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும் எனவும், பாகிஸ்தான் இராணுவம் இந்திய இராணுவம் மீது அடிக்கடி தாக்குதல்கள் நடத்துவது ஏற்றுக்கொள்ள முடியாது எனவும். இத்தகைய செயல்களை நிறுத்தி காஷ்மீர் பிரச்சினை குறித்து இந்தியாவுடன் மீண்டும பேச்சு வார்த்தையை தொடர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்

பாகிஸ்தான் இத்தகைய போக்கு தெற்காசிய நாடுகளிடையே வன்முறையை தூண்டுகிறது. எனவே அதை தவிர்ப்பதற்கு இந்தியாவுடனான பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு பாகிஸ்தான் அரசை வற்புறுத்துவேன் எனவும் கூறியுள்ளார். (உ-3)

## அமெரிக்க- பிரித்தானிய விமானங்கள் இணைந்து ஈராக்மீது தாக்குதல்

[வாஷிங்டன்]

அமெரிக்க - பிரித்தானிய விமானங்கள் கூட்டாக இணைந்து ஈராக் தலைநகர் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் ஒருவர் பலியானதுடன் பதினொரு பேர் காயமடைந்துள்ளனர்.

1998 ஆம் ஆண்டின் பின்னர் முதற்தடவையாகஇத் தாக்குதல் ஈராக் மீது நடத்தப்பட்டுள்ளது.

விமானத்தாக்குதலை ரஷ்யா வன்மையாகக் கண்டித்திருக்கும் அதேவேளை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஷ் புஷ் இத்தாக்குதல் வழமையானதே எனத் தெரிவித்துள்ளார். [உ-2]

## கடலில் மூழ்கிய ஜப்பானிய மீன்பிடிப்படகு மீட்கும்பணியில் ரோபோ

[டோக்கியோ]

அண்மையில் அமெரிக்க அணு சக்தி நீர் மூழ்கிக் கப்பலுடன் மோதியதால் மூழ்கடிக்கப்பட்ட ஜப்பானிய மீன்பிடிப்படகை மீட்பதற்கு ரோபோ பயன்படுத்தப் பட்டுள்ளது.

சூப்பர்ஷ்கோபியோ எனும் ரோபோவே இதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது

இது சுமார் ஆயிரத்து 800 அடி ஆழத்தில் அமிழ்ந்துள்ள ஜப்பானியப்படகை மீட்க உதவும் என நம்பப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, இச்சம்பவம் தொடர்பாக ஜப்பானிய பிரதமரை பதவி விலக வேண்டும் என பரவலாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், ஜப்பானிய பிரதமர் யெஷிரோ மோரி உடனடியாகவே இம்மீட்பு முயற்சிக்கு நடவடிக்கை எடுக்கவில்லையென ஜப்பானியஎதிர்க்கட்சி குற்றம்சாட்டி உள்ளது. (உ9)

## மனைவிமீது ஆத்திரம் பாலகர்கள் பலி

[வாஷிங்டன்]

மனைவியின் மீதுள்ள ஆத்திரத்தினால் பிள்ளைகளைக் கொன்று பழிதீர்த்துள்ள சம்பவம் புளோரிடாவில் இடம் பெற்றுள்ளது.

மூன்று வயதும், ஐந்து வயதும் நிரம்பிய பாலகர்களை காருக்குள் வைத்து கடலுக்குள் தள்ளிவிட்டார்.

விபரீதத்தை உணராத பாலாகர்கள் கடலுக்கு இரையாகிவிட்டார்கள்.

இந்திய வம்சாவழியினராகிய இவர், தனது மனைவி தன்னைக் கவனிக்காது பிள்ளைகளுடனேயே நேரத்தைச் செலவிடுவதால் இவ்வாறு செய்ததாக கூறியுள்ளார். [செ]

## கரடிகளுக்கு திருமணம்

(பீக்கிங்)

காதலர் தினமான பெப்ரவரி 14 ஆம் திகதி கரடிகளுக்குத்திருமணம்செய்தஅதிசயம் சீனாவின் நான்சிங் உயிரியல் பூங்காவில் நடைபெற்றது.

இக்கரடிகள் கேக் வெட்டித் தமது திருமணத்தினை கொண்டாடி மகிழ்ந்தன.04)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

பெப் மாதம் 16ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 170698 எ | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 164701 எ | 164701 பி |
| 164701 சி | 164701 டி |
| 167345 எ | 167345 பி |
| 167345 சி | 177866 எ |
| 177866 பி | 180488 எ |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 180757 எ | 180757 பி |
| 163077 எ | 178324 எ |
| 178324 பி | 179908 எ |
| 179908 பி | 179982 எ |
| 179982 பி | 180113 எ |
| 180113 பி | 180225 எ |
| 181903 எ | 181990 எ |
| 182171 எ | |

### கரவெட்டி

| | |
|---|---|
| 146150 எ | 146150 பி |
| 146150 சி | 151483 எ |
| 154944 எ | 144944 பி |
| 155679 எ | 155679 பி |
| 155799 எ | 155799 பி |
| 158113 எ | 158320 எ |
| 158320 பி | 158353 எ |
| 158353 பி | 158353 சி |
| 159964 எ | 159964 பி |
| 160138 எ | 160138 பி |
| 160138 சி | 160139 எ |
| 160140 எ | 162049 எ |
| 162049 பி | 162049 சி |
| 162196 எ | 162196 பி |
| 162196 சி | 162196 டி |
| 162317 எ | 162350 எ |
| 164627 எ | 164627 பி |
| 164695 எ | 165106 எ |
| 167211 எ | 167211 பி |
| 167211 சி | 167211 டி |
| 167211 ஈ | 167322 எ |
| 167322 பி | 167322 சி |
| 167322 டி | 167327 எ |
| 167379 எ | 167461 எ |
| 167971 எ | 167971 பி |
| 167971 சி | 167971 டி |
| 168019 எ | 169750 எ |
| 172152 எ | 172152 பி |
| 172152 சி | 172152 டி |
| 172152 ஈ | 172175 எ |
| 172175 பி | 176017 எ |
| | 174708 எ |
| 176059 எ | 176059 பி |
| 176132 எ | 176153 எ |
| 176221 எ | 176269 எ |
| 176269 பி | 176269 சி |
| 176269 டி | 176347 எ |
| 176347 பி | 176347 சி |
| 176398 எ | 176398 பி |
| 176399 எ | 176399 பி |
| 176405 எ | 176405 பி |
| 176471 எ | 176496 எ |
| 176496 பி | 176496 சி |
| 177538 எ | 177558 பி |
| 177538 சி | 177538 டி |
| 177538 ஈ | 177540 எ |
| 177540 பி | 177582 எ |
| 177582 பி | 177607 எ |
| 177607 பி | 177624 எ |
| 177624 பி | 177637 எ |
| 177637 பி | 177637 சி |
| 177647 எ | 177724 எ |
| 177734 எ | 177787 எ |
| 177805 எ | 177805 பி |
| 177807 எ | 177812 எ |
| 177812 பி | 177812 சி |
| 177817 எ | 177835 எ |
| 177835 பி | 177864 எ |
| 177908 எ | 177908 பி |
| 180498 எ | 180498 பி |
| 181276 எ | 181276 பி |
| 181276 சி | 181276 டி |
| 181290 எ | 181290 பி |
| 181293 எ | 181293 பி |

| | |
|---|---|
| 181364 எ | 181364 பி |
| 182238 எ | 182238 பி |
| 182548 எ | 182562 எ |
| 182562 பி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 159557 எ | 159557 பி |
| 159557 சி | 162710 எ |
| 168 4 15 எ | 168415 பி |
| 170532 எ | 173364 எ |
| 173322 எ | 173324 எ |
| 173351 எ | 173359 எ |
| 173364 எ | 173364 பி |
| 173365 எ | 173365 பி |
| 173365 டி | 173375 ஈ |
| 173409 எ | 173409 பி |
| 174082 எ | 174082 பி |
| 177303 எ | 177303 பி |
| 177306 எ | 177306 பி |
| 177306 சி | 177328 எ |
| 177328 பி | 177328 சி |
| 177328 டி | 177328 ஈ |
| 177349 எ | 177385 எ |
| 177385 பி | 177389 எ |
| 177422 எ | 177424 எ |
| 177427 எ | 177427 பி |
| 177447 எ | 177447 பி |
| 177455 எ | 177455 பி |
| 177511 எ | 178207 எ |
| 178207 பி | 178212 எ |
| 178212 பி | 178212 சி |
| 179611 எ | 179611 பி |
| 179670 எ | 179699 ஏ |
| 179805 எ | 179805 பி |
| 180627 எ | 180627 பி |
| 180635 எ | 180635 பி |
| 180647 எ | 180659 எ |
| 180681 எ | 180681 பி |
| 180690 எ | 180690 பி |
| 180704 எ | 180704 பி |
| 180704 சி | 186710 எ |
| 180715 எ | 180715 பி |
| 180719 எ | 180719 பி |
| 180726 எ | 180732 எ |
| 180732 பி | 180732 பி |
| 180806 எ | 186806 பி |
| 180806 சி | 180812 எ |
| 180812 பி | 180820 எ |
| 180820 பி | 180820 சி |
| 180834 எ | 180835 எ |
| 180835 பி | 180835 சி |
| 180836 எ | 180899 எ |
| 180899 பி | 180900 எ |
| 180911 எ | 186959 எ |
| 181019 பி | 181019 எ |
| 180722 எ | 180722 பி |

### மருதங்கேணி

| | |
|---|---|
| 174646 ஏ | 177729 ஏ |
| 177729 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 170808 ஏ | 170808 பி |
| 171309 ஏ | 171409 ஏ |
| 171409 பி | 171586 ஏ |
| 174179 ஏ | 177050 ஏ |
| 177097 ஏ | 177097 பி |
| 177108 ஏ | 1771[illegible]8 பி |
| 177180 ஏ | 177180 பி |
| 177186 ஏ | 177192 ஏ |
| 177192 பி | 177192 சி |
| 177192 டி | 177201 ஏ |
| 177201 பி | 179540 ஏ |
| 179550 ஏ | 179550 பி |
| 179587 ஏ | 178657 ஏ |
| 179657 பி | 179657 சி |
| 179690 ஏ | 179690 பி |
| 182055 ஏ | 179888 ஏ |
| 179888 பி | 179888 சி |
| 179989 ஏ | 179989 பி |
| 179989 சி | 180306 ஏ |
| 182076 ஏ | 182076 பி |
| 182097 ஏ | 182097 பி |
| 182107 ஏ | 182107 பி |
| 182107 சி | 1822113 ஏ |
| 182198 ஏ | 182198 பி |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 120073 ஏ | 120073 பி |
| 142540 ஏ | 142540 பி |
| 145884 ஏ | 145884 பி |
| 151116 ஏ | 151116 பி |
| 154943 ஏ | 154943 பி |

(நாளை தொடரும்)

## பிரிவுத்துயர் பகிர்வு

சு. விவேகானந்தன்

(கிராமசேவையாளர் சண்டிலிப்பாய்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சு. விவேகானந்தன் 16. 02. 2001 அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17 .02. 2001 அன்று நடைபெற்றன.

தகவல்

கு. சக்திதாசன்

இள்ம்பரதி இளைஞர் கழகம்;

அரம் போலும் கூர்மையை ரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பு இல்லாதவர்
குறள்

# வலம்புரி

## சந்ததிக்கே பரிநாசம்!

**2000**ம் ஆண்டில் நடைபெற்ற 5ம் தர புலமைப் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்றவல்வை சிவகுரு வித்தியாலய மாணவன் சிவரூபனுக்கு ஜப்பான் சுற்றுலாவில் துரோகம் இழைக்கப்பட்டுள்ளது.

ஏழைக்குடும்பத்தில் பிறந்து தனது அயராத முயற்சியால் புலமைப் பரீட்சையில் யாழ் மாவட்டத்திலேயே முதலாவது இடத்தைப் பெற்ற மாணவன் சிவரூபனைப் பாராட்ட வேண்டிய கல்விச் சமூகம் அந்த மாணவனின் ஜப்பான் பயணத்தைத் தடுத்து பழிவாங்கி விட்ட துரோகிகளை நினைக்கும் போது நெஞ்சம் தி க்கிடுகிறது.

புலமைப்பரீட்சையில் மாவட்ட. தேசிய ரீதியில் முதன்மை இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ஜப்பான் சுற்றுலாவிற்குச் செல்லும் வாய்ப்பை அரசாங்கம் வழங்கி வருவதை கல்வித்திணைக்களமோ அதிபர் ஆசிரியர்களோ அறியாமல் இருந்திருக்க முடியாது.

யாழ் மாவட்டத்தில் புலமைப்பரீட்சையில் இரண்டாம் இடத்தைப்பெற்ற யாழ்ப்பாணம் டொண் பொஸ்கோ வித்தியாலய மாணவி ஜப்பான் சுற்றுலாவிற்குச் செல்வதற்கான அனுமதியைப் பெற முடியுமெனில்,

மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவன் சிவரூபன் ஜப்பான் சுற்றுலாவிற்குத் தெரிவாகாமைக்குரியகாரணம் என்ன என்பதை வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர், உப அதிபர் வடமராட்சி கல்விவலயப் பணிப்பாளர் ஆகியோர் வெளிப்படையாக விளக்குவது அவசியமாகும்என்பதுடன்,

மாணவன் சிவரூபனின் ஜப்பான் பயணத்துக்கு தடைவிதித்துப் பாதகம் செய்தவர்கள் யார் என்பதை அறிவதற்கு வடமராட்சியிலுள்ள பொது அமைப்புகள் முயற்சிக்க வேண்டும் மாணவனுக்கு ஏற்பட்ட துரோகம் குறித்து ஜனாதிபதி, கல்வி அமைச்சர், வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும். இது ஒருபுறம் நடக்க ஏழை மாணவனுக்குத் துரோகம் செய்த பாதகரின் சந்ததி பரிநாசப்பட இறைவனும் வேலை செய்வான்.


# 19 ஆண்டுகள் அறப்பணியில் வானுயர ஓங்கி நிற்கும் துர்க்காபுரம் மகளிர் இல்லம்!

தெல்லிப்பழையில் ஓர் துர்க்காபுரம். துர்க்காபுரத்தில் ஓர் மகளிர் இல்லம். அந்த மகளிர் இல்லம் 1982 ஆம் ஆண்டு மாசித்திங்கள் மூன்றாம் நாள் ஒன்பது பெண்பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

1982 இல் ஆரம்பிக்கப்பட்ட இம்மகளிர் இல்லம் சாற்றிக் கொண்டு வானுயர்ந்த கோபுரங்களையும், அழகான மணிமண்டபங்களையும், கண்ணைப் பறிக்கும் வர்ணங்களினால் அழகுபடுத்தி தம்மைத்தாமே ஆலய நிர்வாகிகளாக பறை சாற்றிக் கொண்டு வருபவர்களின் சிந்தனைகளுக்கு எட்டாத வகையில் துர்க்கா அழகான இரு மாடிக் கட்டடத்தைக் கொண்டுள்ளது.

சுமார் 100 பேர்கள் வதியக்கூடிய விசாலமுடைய இக் கட்டடம் 16 மலசல கூட அறைகளையும், 8 குளியல் அறைகளையும்நோயுற்றோர் தங்கக் கூடிய பிரத்தியேக அறைகளும், படிப்பகம், விருந்தினர் விடுதியையும் தன்ன

தற்போது மகளிர் இல்லத்தை 83 மகளிர்கள் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் ஆண்டு 2ல் இருந்து ஆண்டு 12 வரையும் 51 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களுடன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளிவந்தவர்கள் 3 பேர்கள், மற்றும்



துர்க்காபுரம் மகளிர் இல்ல இரு மாடிக் கட்டடத்தின் எழில்மிகு தோற்றம்

1988 இல் இலங்கை அரசின் சட்டதிட்டங்களுக்கமைய நன்னடத்தைப் பாதுகாவலர் சிறுவர் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டு அரச அங்கீகாரம் பெற்ற ஒரு இல்லமாக மாறி இன்று 19ம் ஆவது ஆண்டு நிறைவு விழாவினைக் குதூகலமாகக் கொண்டாடுகின்றது.

1982ஆம் ஆண்டில் இருந்து 1997 ஆம் ஆண்டு வரை சுமார் 500 க்கும் மேற்பட்ட பெண்பிள்ளைகள், இராணுவ சூழ்நிலைகளினால் இடம்பெற்ற இடப்பெயர்வுகளினாலும், இராணுவ அனர்த்தங்களினால் பெற்றோரை இழந்து திக்கற்ற வாழ்வில் தடம்புரண்ட பிள்ளைகளுக்கும் இம் மகளிர் இல்லம் இடம் கொடுத்து அவர்கள் வாழ்க்கையை வளமுள்ளதாக மாற்றி சமூகத்தில் அவர்களுக்கும் சமூக அந்தஸ்து ஒன்றினை பெற்றுக் கொடுத்தது.

துர்க்கை அம்மனின் அருட் கடாட்சத்தினாலும் நல்லிதயம் படைத்த சான்றோர்களின் ஆதரவினாலும் மகளிர் இல்லம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது.

யாழ். மண்ணில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களும், ஒவ்வொரு கிராமங்களின் பெருமைகளைப் பறை துரந்தரியின் மனக்கண் முன் எழுந்த எண்ணக் கருவாக உருவெடுத்தது. ''துர்க்காபுரம் மகளிர் இல்லம்'' வரலாற்றுச் சாதனை படைக்க ஓர் அம்சமாகும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் யாழ். மண்ணில் உள்ள சைவ ஆலயங்களுள் துர்க்காதேவி ஆலய நிர்வாகம் ஒன்றே இத்

**வா. தர்மிஷா**

தகையதொரு அரும் பெரும் பணியினை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்நெறி பிறழாது வாழவும் இறையருளுடன் கூடிய வளமான வாழ்வினை தமிழ்ப் பெண்களுக்குவழங்க வேண்டுமென்ற நல்ல நோக்குடன் திக்கற்ற பெண்பிள்ளைகளைத் தத்தெடுத்து தந்தையுமாய், தாயுமாய், உற்ற துணையுமாக இருந்து அறநெறிக்கல்வி புகட்டி பல்கலைக்கழகம் வரையிலான பட்டப்படிப்புகளைப் பெற்றுக்கொடுத்து நல்லனவற்றை செய்து வரும் துர்க்கா துரந்தரியின் அன்பு மழலைச் செல்வங்களே துர்க்காபுரம் மகளிர் இல்ல பெண் தெய்வங்களாகும்.

'சிறுகத் தொடங்கி பெருக வாழ்' என்னும் ஆன்றோர் மொழிக்கொப்ப 'துர்க்காபுரம் மகளிர் இல்லம் இன்று கத்தே அடக்கியுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் தஞ்சம் புகுந்து தம் வாழ்வை சைவ சமய மாசீரிய வழிகளில் நெறிப்படுத்திய பின் இல்லத்தை விட்டுத் தமது சொந்த விருப்பத்தின்பேரில்வெளியேறியபெண்பிள்ளைகள் திருமணம் செய்து இனிய இல்லறம்நடத்தியும், வெளிநாடுகளுக்குகடல் கடந்து சென்று குடியேறியும், வெளிமாவட்டங்களில் வேலை வாய்ப்பு பெற்று சென்றவர்களும் துர்க்கை அம்மன் அருளாலும், துர்க்கா துரந்தரியின் நல்லாசியினாலும் இனிதே வாழ்ந்து வருகின்றார்கள்.

வலிகாமம் வடக்குப் பகுதிகளில் இடம் பெற்ற இடப்பெயர்வினால் மருதனார் மடத்தில் அமைந்துள்ள சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியிலும். அதன் பின் 1995 ல் வலிகாமப் பகுதிகளில் இடம் பெற்ற பாரிய இடப் பெயர்வின் போது உசனிலும் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளும் துர்க்காதுரந்தரியும்புகலிடம் தேடிக் கொண்டனர். இரண்டு இடப் பெயர்வுகளையும் தாண்டி இப்பொழுது துர்க்காபுரத்தில்நிரந்தரமாக தனது இருமாடிக் கட்டடத்தில் மகளிர் இல்லம் இயங்கி வருகின்றது.

அச்சகம். இல்லப் பணிவிடைகள், ஆலயக பரிபாலர், நல்லூரில் உள்ள துர்க்கா மணிமண்டபச் சிற்றுழியர்கள் 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் என வகைப் படுத்தப்பட்டு பணி செய்து வருகிறார்கள்.

துர்க்காபுர இல்ல மாணவிகள் விளையாட்டு, இசை, நடனம், நாடகம் மற்றும் சகல துறைகளிலும் ஈடுபட்டு போட்டிகளில் பங்கு கொண்டு பரிசில்களையும் தட்டிக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு பிரத்தியேகமான ஆங்கிலம், விஞ்ஞான வகுப்புகளும் ஒழுங்கு செய்யப்பட்டு கற்பிக்கப் பட்டு வருகிறது.

இன்று 19 வது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் இன்னமும் ஆறு ஆண்டுகளுக்குப் பின் வெள்ளி விழாவினையும் சிறப்பாகக் கொண்டாட எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பான் என்பது திண்ணம்.

அம்மாவின் வார்த்தையில் இதனைக் கூறுவதாயின் ''நல்லதை நினைத்தோம்; நல்லதைப் பேசினோம்; நல்லதைச் செய்தோம்; என்ற திருப்தி ஏற்படும் என்று கூறி எல்லாம் நல்ல படியாகவே நடக்க துர்க்கை அம்மன் அருள் பாலிப்பாராக.

## மகளிர் இல்லத்தின் 19வது ஆண்டுநிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர்இல்லத்தினது 19ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்இன்று காலை 9 மணிக்கு துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பேராசிரியர் சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவரும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான திருமதி ஸ்ரீபாஸ்கரன் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். ந-9

## கன்னிமரியாளின் படம் மீட்பு

(வாஷிங்டன்)

தென் அமெரிக்காவின் எல் சர்வடோர் பகுதியில் செவ்வாயன்று நடைபெற்ற பூமி அதிர்ச்சியில் தரைமட்டமாக்கப்பட்டு நொருங்கிய வீடு ஒன்றில் எதுவித பாதிப்பும் இல்லாத கன்னிமரியாளின் திருவுருவப்படம் ஒன்று கட்டட இடிபாடுகளின் மத்தியில் மீட்கப்பட்டுள்ளது. [உ-7]

## சேவை நேரம் நீடிப்பு

(சுன்னாகம்)

அளவெட்டி, மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் சேவை நேரம் நீடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களின் நன்மை கருதி மேற்படி சேவை நேர நீடிப்பு இடம்பெற்றுள்ளது [உ-25

மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

[கி-1500]

# மகனை தேடி வந்த ஆயுதக்குழுவினர் அவனைசுட வேண்டுமெனக்கூறினர்

### முரளியின் மரணவிசாரணையில் தாய் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 3ந்திகதி எனது மகன் முரளிதரனைத் தேடி ஆயுதம் தரித்த குழுவொன்று எமது வீட்டிற்கு வந்து அவனைப்பற்றி விசாரித்தது. அப்போது முரளிதரனை சுட வேண்டுமென அவர்கள் சிங்களத்தில் பேசிக்கொண்டார்கள். சிங்களம் எனக்குத் தெரிந்ததால் நான் அதனைப் புரிந்துகொண்டேன் இவ்வாறு கோண்டாவில் பகுதியிலுள்ள பற்றைச்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்ட குற்றாலம் முரளிதரனின் மரணவிசாரணையின்போது சாட்சியமளித்தமுரளிதரனின்தாயார் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது மகனை 51வது படைப்பிரிவினர் பலதடவைகள் கைது செய்து கடுமையாகத்தாக்கியுள்ளனர் இதனால் எனது மகன் வீட்டில் கூட நித்திரை கொள்வதில்லையெனத் தயார் தெரிவித்தார்.

மரணவிசாரணையை அடுத்து சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-12

சாரங்கனின் விஷேட விலைக்கழிவு இன்று முதல் 07/03/2001 வரை உங்கள் ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்

**சாரங்கன் நகைமாடம்**

45. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-1503]

ஊர்காவற்றுறை மக்கள் வங்கியின்

## நடமாடும் சேவை வேலணையில் நடக்கும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி ஊர்காவற்றுறைக் கிளையின், நடமாடும் வங்கிச்சேவை எதிர்வரும் 20ந்திகதி செவ்வாய்க்கிழமை வேலணை ப. நோ, கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இவ் நடமாடும் சேவையின் மூலம் வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, மற்றும் நெடுந்தீவு பிரதேச மக்களும் இப்பிரதேச பாடசாலை மாணவர்களும் தமது வங்கித் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள முடியுமென்று வங்கியின் முகாமையாளர் ஜி. சற்குணபாலன் தெரிவித்துள்ளார்;

வேலணை பிரதேசசெயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பிரதேச செயலகத்தால் விடுக்கப்பட்டகோரிக்கைக்கு அமைவாகவே இச் சேவை நடைபெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. [இ

## தமிழ் நிர்வாகமொழி

(கொழும்பு)

பன்னிரெண்டு சதவீகமான தமிழ் மொழி பேசும் மக்கள் வசிக்கும் இடங்களில் தமிழ் நிர்வாசமொழியாகப் பிரகடனம் செய்யப்படுதற்கான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளிவரவுள்ளதாக இனவிவகார தேசிய நல்லிணக்க கனிவள பிரதி அமைச்சர் சோமசுந்தரம் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்; [செ]

## குண்டுகள் மீட்பு

தென்மராட்சி மறவன்புலோ பகுதியில் இருந்து நேற்று முன்தினம் மோட்டார் குண்டுகள், கைக்குண்டுகள் மற்றும் நிலக்கண்ணி வெடிகள் என்பவற்றை இராணுவத்தினர் மீட்டுள்ளதாக விசேட ஊடகத்தகவல்நிலையம்தெரிவித்துள்ளது. (ந-9)

## வன்னிக்கு உணவு

இராணுவக் சட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு கடந்த ஏழு நாட்களில் 52 லொறிகளில் உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (ந-9)

## வவு-மன்னார் வீதியில் வீரப்பனைக் கண்டேன்

### இராணுவ சாரதிதகவல்

(கொழும்பு)

இந்தியப் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் சந்தன மரக்கடத்தல் மன்னன் வீரப்பன் வவுனியா மன்னார் வீதியில் நிற்பதைக் கண்டேன்.

இவ்வாறு 21ஆவது இராணுவப் பிரிவின் வாகனச் சாரதியொருவர் தெரிவிததுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தியப் பொலிஸாரால் தேடப்பட்டுவரும் தமிழ்நாடு கர்நாடக எல்லைக் காட்டுப்பகுதியில் வசித்துவந்த வீரப்பன் தனது இரு சகாக்களுடன் வவுனியா மன்னார் வீதியில் நின்றுகொண்டிருந்ததை நான் வாகனத்தில் சென்றபோது மிக அருகில் கண்டேன். நான் வைத்திருந்த அவரது படத்துடன் ஒப்பிட்டு அவரை அடையாளம் கண்டுகொண்டவுடன் அவரை மடக்கிப்பிடிக்க முயற்சி செய்தேன். எனினும் அது முடியவில்லை. அவர் தனது சகாக்களுளன் தப்பித்து காட்டுக்குள் தலைமறைவாகி விட்டார் என அவர் தனது மேலதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார் (இ)

## இறுதி ஆட்டம்

யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கிடையிலான 15 வயது கீழ்ப்பிரிவு கிரிக்கெட் போட்டியில் இறுதியாட்டம் இன்று யா/மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகிறது.

மு. ப. 9 மணி தொடக் மாலை 5-30 மணிவரை இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், யாழ் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி விளையாடும்:

பிரதம விருந்தினராக யா. இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ. பஞ்சலிங்கம் கலந்துகொள்வார்;(உ)

**யாழ்---**

மாணவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவ் இரு மாணவர்களும் மேலதிக விசாரணைகளுக்காக உடுப்பிட்டி இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (இ-9-43)

**ஈ-பி.டி-பி.--**

துள்ளார்;

இதேவேளை யேற்படி அலுவலகம் தமதுஉயிர்பாதுகாப்பு வலயத்துள் இருப்பதால் விடுதலைப்புலிகளால் இம்முகாம் தாக்கப்பட்டிருக்க சந்தர்ப்பமில்லையென இராணுவ உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (இ- 943)

**பற்றைக்குள்---**

வைத்தியசாலைக்கு அனுப்பி சடலத்தைப்பார்ப்பித்ததாக, அதன்பின்பே இறந்தது தனது மகன் எனத்தான் அறிந்து கொண்டதாகவும் தாயார் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 3ந்திகதி ஆயுதம் தாங்கிய நபர்கள் முரளிதரனைத்தேடி வீட்டிற்கு வந்ததாகவும். அவ்வாயுத தாரிகளை இனங்கண்ட முரளிதரன் அவர்கள் பற்றிய விபரங்களை தன்னிடம் கூறி வைத்ததாகவும், தனது மகனை ஆயுததாரிகள் பின் தொடர்ந்ததால்அவர்இரவல் வீட்டில் படுப்பதில்லையெனவும் முரளிதரனின் தாயார் மேலும் தெரிவித்தார்.

**சிஹல---**

திரிய பீடாதிபதிகள் ஐக்கிய தேசியக் கட்சியையும் ஜே வி பியையும் விடுதலைப் புலிகள் விடயத்தில் அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குமாறும்கோரியுள்ளனர்

**சமாதானத்தை**

ஒரு மணி நேரத்துக்கு முன்பதாக இந்து, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவமத அனுட்டானங்கள் நடைபெற்றன; இதில் அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

வடக்குக் கிழக்கு மாகாண பிரதமசங்கநாயக்கர் சியம்பலகஸ்பவ விமலசார தேரர் உட்பட மதகுருமார் பலரும் கலந்து கொண்டனர்;

இந்த அமைதிப் பேரணியில் பதாதைகளும், சுலோகங்களும் எடுத்துச் செல்லப்பட்டன. இதே வேளை மன்னாரில் மன்னார் ஆயர்அதிவண இராயப்புஜோசப்தலைமையில் சமாதானப்பேரணி நடைபெற்றது;

வவுனியா மன்னார் சமாதானப் பேரணியில் சுமார் 10ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்;

**நோர்வேயின் ---**

யின் 35 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுக்கள் வெற்றி அளிக்குமென ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை கொண்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இதே வேளை ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழு அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளுமெனவும அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

**தமிழர் . . .**

மரபுவழித் தாயகம் சுயநிர்ணயஉரிமை, தேசிய இனம் என்பனவற்றை சிதைத்து விடுதலைப்புலிகளை சர்வதேச பயங்கரவாத இயக்கமாக உலகிற்கு காட்ட அரசு எடுத்து வரும் நடவடிக்கை இதுவாகும்.

இந்நிலையில் இவற்றுக்குப் பிரித்தானிய அரசு செவிசாய்க்கவோ அழுத்தங்கள் அச்சுறுத்தல்களைக் கண்டு அடி பணியவோ கூடாது. மக்களின் அபிலாஷைகளைப் பெற்றுத்தரக் கூடிய தீர்வுக்கு மூன்றாந்தர மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் பேச்சு நடாத்தி தீர்வுகாணவேண்டுமென்றும், பிரித்தானியஅரசு விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக் கூடாதெனவும் இம் மகஜரில் கேட்கப்பட்டுள்ளது

### திருத்தம்

15 - 02 - 2001 வியாழனன்று வலம்புரியில் ஜனாதிபதியை அவதூறு செய்த பெண்ணின் வீடு தாக்கப்பட்டது என்ற தலைப்பின் கீழ் வெளியாகிய செய்தியில் தமிழ்ப்பெண் என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது; (ஆ-ர்)

அதி நவீன கருவிகள் மூலம் ஒலிப்பதிவு செய்திடவும் வீடியோ, ஸ்ருடியோ, மணப்பந்தல் சேவைகளுக்கும்,

**மேகாஸ் வீடியோ அன் ஓடியோ**

23, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(கி/1495)

**ஸ்ரீ செல்வா**

(யாழ்ப்பாணம்)

கார்த்திக், பிரபுதேவா நடித்த

உள்ளம் கொள்ளை போகுதே

10-30, மட்டும் (ப. நே)

லிவிங்ஸ்டன், கரன், விவேக், வடிவேல் நடித்த

எங்களுக்கும் காலம் வரும்

2-30 மட்டும் (ப.நே)

(புதிய வெளியீடுகள்)

(கி/1482)

**விற்பனைக்கு**

பாவித்த கடைத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:

**சியானாஸ்**

77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(2540)

### பிரிவுத்துயர் பகிர்வு

குற்றாலம் முரளிதரன்

304, கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகக் கொண்ட குற்றாலம் முரளிதரன் 16-02-2601 அன்று அகாலமரணமடைந்தார். இறுதிக் கிரியைகள் (18-02-2001) இன்று நடைபெறும்.

தகவல்

குடும்பத்தினர்.

**எரிக் கணேஷ் முக்குக்கண்ணாடி அகம் - பல்கட்டுதல்.**

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மங்கிடும் கண்களுக்கு பொங்கிடும் பார்வை அளிப்பவர்கள்

கிளை: 91, கே கே. எஸ் வீதி, கொக்குவில்.

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களதுஅச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.